மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை : மத்தியப் புலனாய்வுப் பிரிவில் தயாரிக்கப்படும் அறிக்கைகள் முன்னாள் முதல் அமைச்சர்களுக்கு அனுப்பப்பட்டதாக நான் சொல்லவில்லை. அப்படி ஓர் உறுப்பினர் குறிப்பிட்டார். அந்த நகலை நான் பார்க்கவில்லை.

திரு கே. என். குமாரசாமி : ஜனநாயகத்திலே மத்திய அரசு மாநில அரசைக் கண்காணிக்கிற மரபை முதலமைச்சர் அவர்கள் ஏற்றுக்கொள்வது என்றால், அது ஜனநாயக மரபா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை : நான் ஏற்றுக் கொள்வது என்ற முறையிலே பொருள்கொள்ளத் தேவையில்லை, சகித்துக்கொள்வது என்ற முறையிலே பொருள் கொள்ளலாம்.

மேலூரில் தியணைப்புப்படை நிலையம்.

*294 வினா.—திரு. பெ. மலைச்சாமி : மாண்புமிகு முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுரை மாவட்டம் மேலூர் அல்லது நத்தத்தில் தீயணைக்கும் படை நிலையம் ஒன்றை அரசு நிறுவ திட்டம் இட்டுள்ளதா ?

(இ) ஆம், எனில், எப்போது துவங்கப்படும் ?

மாண்புமிகு திரு. சி. என் அண்ணாதுரை : (அ) இல்லை.

(இ) இக் கேள்விக்கு இடமில்லை.

திரு. பெ. மலைச்சாமி : தலைவர் அவர்களே, தற்போது நத்தம், கொட்டாம்பாடி இந்த இரண்டு இடங்களிலும் தீயணைக்கப்படவேண்டுமானால், மதுரையிலிருந்துதான் தீயணைப்புப் படைகள் வரவேண்டிய நிலைமை இருக்கிறது. நத்தத்திலே ஒரு தீயணைப்பு நிலையம் ஏற்படுத்துவதன் மூலம் அந்தப் பகுதி மக்களுக்கு நன்மையாக இருக்கும் என்பதால், இதை மீண்டும் சர்க்கார் பரிவோடு கவனிக்குமா ?

மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை : தீயணைப்பு நிலையங்கள் முக்கியமாக எந்த இடங்களில் இருக்கவேண்டுமென்பது நிதி நிலையினவலுவைப்பொறுத்து இருக்கிறது. நத்தத்தைப் பொறுத்த வரையில் மதுரையிலிருந்து வரவேண்டுமென்று கனம் உறுப்பினர் அவர்கள் சொன்னார்கள். 35 கிலோமீட்டருக்கு உள்ளடங்கிய நிலையில் தீயணைப்பு இருப்பதாலே மற்ற பல இடங்களுக்கும் இடையூறு என்பதுகூட இருப்பதாகத் தெரியவில்லை. 1964, 1965, 1966 ஆகிய மூன்று வருடக் கணக்குகளை எடுத்துப் பார்த்தால் இரண்டே இரண்டு முறைதான் அந்தப் பகுதியிலே தீ விபத்து ஏற்பட்டிருக்கிறது ; ஆகையினாலே தீயணைப்புப் படை உடனடியாக ஏற்படுத்த வேண்டிய அவசியம் இல்லை.

ஆபாச நூல்கள் விற்பனை.

*295 வினா.—திரு. எஸ். சிவசுப்பிரமணியன் : மாண்புமிகு முதல் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ் நாட்டில் ஆபாச புத்தகங்கள் நாவல் என்ற பெயரால் விற்பனையாகி சிறுவர்களைக் கெடுத்து வருவது அரசாங்கத்திற்குத் தெரியுமா ?

(இ) ஆம் எனில், அதன் மீது எடுத்த நடவடிக்கைகள் என்ன ?